1982 மார்ச் 1]

களை இந்த அச்சுத் தொழிலாளர்கள் அனுபவித்து வருகிறார்களே, ஆகவே அதை உடனடியாக களையும் பொருட்டு, குறிப்பிட்ட ஒரு கால எல்லைக்குள்ளாக இந்த சம்பள நிர்ணயத்தைச் செய்து அவர்களுக்கு நிவாரணம் வழங்க அரசு முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, 1—5—1978–லே அரசு நிர்ணயம் செய்திருக்கிறது தற்போது 80-ம் 81ம் முடிந்துவிட்டதாகையால் உடனேயே கமிஷனருக்கு அதுபற்றி குறிப்பு அனுப்பி, ஊதிய நிர்ணயக் குழுவிற்கு யார் யாருக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கலாம் என்று கேட்டிருக்கிறோம். அவர்கள் எந்தெந்த இடங்களில் எந்தெந்த தொழிற்சங்கங்கள் அதிக பிரதிநிதித்துவம் வாய்ந்தது என்ற விவரங்கள் அனுப்புவார்கள். அதைப் பரிசீலனை செய்து, மற்ற அம்சங்களையும் ஆலோசித்து குழுவை அமைக்கவிருக்கிறோம். அந்த குழுவினர் இதில் விரைவில் பணியாற்றுவார்களேயானால் அவர்களுக்கும் பெருமை, அரசும் விரைவிலே அதில் முடிவெடுக்க உதவியாக இருக்கும்.

ஒட்டப்பிடாரம் தொகுதியில் கிராமக் கூட்டுறவு வீடுகட்டும் சங்கம் ஆரம்பிக்கும் திட்டம்.

*வினா எண் 294—**திரு. ரா. கு. பெருமாள்:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் ஒட்டப்பிடாரம் தொகுதியில் கிராமக் கூட்டுறவு வீடுகட்டும் சங்கம் ஆரம்பிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த ஊரில் ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு.எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ) நெல்லை மாவடடம் ஒட்டப்பிடாரம் தொகுதியில் புதியதாக ஒரு கிராம கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் துவங்க அரசு 15—12—1981 ல் ஆணைகள் பிறப்பித்துள்ளது. அச்சங்கம் ஒட்டப்பிடாரத்தில் அமைக்கப்படும்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரத்தில் கிராமக் கூட்டுறவு வீடுகட்டும் சங்கத்தை அமைக்கவிருப்பதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் அதை இந்த ஆண்டே துவங்க அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 100 கிராம கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களை தற்பொழுது 110 ஆக ஆக்கியிருக்கிறோம். அந்த 10லே ஒன்றுதான் இந்த ஒட்டப்பிடாரம் கூட்டுறவுச் சங்கம். அது விரைவிலே செயல்பட எல்லா நடவடிக்கையும் எடுக்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்திலே, ஒட்டப்பிடாரத்தில் ஒரு கிராம கூட்டுறவு வீடுகட்டும் சங்கம் அமைக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நன்றி. இப்பொழுது இருக்கிற கூட்டுறவு சங்கங்களில் வீடுகட்டுவதற்காக மனுக்களைக் கொடுத்தும் கடன் கொடுக்கப்படாமல் இருக்கிறதே அது அரசுக்குத் தெரியுமா? குறிப்பாக ஆதி திராவிடர் மக்களின் மனுக்களை மட்டும் பரிசீலனைக்கு அனுப்பி வையுங்கள் மற்றவைகளை அனுப்ப வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்களாமே—அதிலே கூட வந்த மனுக்கள் அத்தனைக்கும் பணம் கொடுக்கப்படாமல் இருக்கிற நிலைமை இருக்கிறதே அந்த நிலையை மாற்றி, அவர்களுக்கு உடனடியாக பணம் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, காலதாமதம் ஆனது உண்மைதான், அது பணம் வரவேண்டிய இடத்திலிருந்து வருவதற்கு காலதாமதம் ஆனதால் ஏற்பட்ட விளைவு, அந்தக் காலதாமதத்தை தவிர்க்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்கிறது. மீண்டும் இப்படிப்பட்ட புகார் வராது என்று கருதுகிறோம்.

கங்கை—கோதாவரி—காவிரி இணைப்புத் திட்டம்.

***வினா எண் 295 — திரு. எம். சின்னசாமி; திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கங்கை-கோதாவரி, காவிரி ஆறுகளின் இணைப்புத் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) மேற்படி திட்டத்தை விரைவுபடுத்த மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) மற்றும் (ஆ) இந்திய துணைக்கண்டத்திலுள்ள ஆறுகளை அபிவிருத்தி செய்வது கங்கை-காவிரி ஆறுகளை இணைப்பது போன்ற திட்டங்களை ஆய்வு செய்தபின், மத்திய அரசு தற்போது நாட்டில் உள்ள

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS